




# இந்தியாவின் முதல் டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்பு (இறுதியாக) நடைபெறுகிறது.

2021 மக்கள் தொகை கணக்கெடுப்பு தாமதமானதால், இந்தியாவில் இது 2011 இல் நடைபெற்றது. மக்கள்தொகைத் தரவு தேவைப்படும் கொள்கைகளுக்கு, புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பு முக்கியமானது.

விருப்ப சுய கணக்கீட்டுடன், இந்திய குடியிருப்பாளர்கள் இப்போது கணக்கீட்டாளர் வீட்டிற்கு வரும் முன்னரே 15 நாட்களுக்கு முன்பு தங்கள் வீட்டுத் தகவல்களை ஒரு ஆன்லைன் மேடையில் பதிவு செய்யலாம்.

**நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டியவை இங்கே.**

# இந்தியாவின் 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களில் நடைபெறும்.

## கட்டம் 1

வீடுகளின் பட்டியலிடல் மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்பு

(ஏப்ரல் - செப்டம்பர் 2026)

- வீடுகள், வசதிகள் மற்றும் சொத்துக்கள் பற்றிய தகவல்களை அரசு சேகரிக்கும்.
- எண்ணிக்கையாளர் வீட்டுக்கு வருவதற்கு 15 நாட்கள் முன்பு நீங்கள் உங்கள் தகவல்களை இணைய போர்ட்டலில் சமர்ப்பிக்கலாம்.

## கட்டம் 2

மக்கள்தொகை கணக்கீடு

(பிப்ரவரி 2027)

- மக்கள்தொகை விவரங்கள், கல்வி, இடப்பெயர்வு, கருவுறுதல் போன்ற தகவல்கள் ஆகியவற்றுடன் முதல் முறையாக சாதி அடையாளங்களும் சேகரிக்கப்படும்.


**கட்டம் 1 - க்கான சுய கணக்கீடு அடுத்த ஆறு மாதங்களில் படிப்படியாக நடைபெறும்.**

# எனவே, சுய கணக்கீடு என்றால் என்ன?

சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவின் 8-வது மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கவிருக்கிறது. முதல்முறையாக அனைத்து தகவல்களும் டிஜிட்டலில் பதிவு செய்யப்படும்.

சுய கணக்கீடு மூலம், எண்ணிக்கையாளர் வருவதற்கு முன்பு நீங்கள் உங்கள் வீட்டு விவரங்களை இணைய போர்ட்டலில் தானாக சமர்ப்பிக்கலாம்.


**சுய கணக்கீடு விருப்பமானது மற்றும் செயல்முறையை எளிமையாக்குவதற்காக உள்ளது**



# சுய கணக்கீடு எப்படி செய்வது?

முதலில், இணைய போர்ட்டலுக்கு செல்லுங்கள்: **se.census.gov.in.**

இது 16 மொழிகளில் கிடைக்கும்.



# சுய கணக்கீடு (SE) எப்படி செய்வது?

1. SE போர்ட்டலில் உள்நுழையவும்
2. உங்கள் மாநிலம்/யூனியன் பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்து கேப்ட்சாவைத் தீர்க்கவும்
3. பெயர் மற்றும் மொபைல் எண்ணைச் சேர்க்கவும்*
4. வரைபடத்தில் உங்கள் இருப்பிடத்தை அடையாளம் காணவும்
5. வீட்டு விவரங்களை நிரப்பவும் (கட்டுமானம், சொத்துக்கள், வீட்டில் திருமணமான தம்பதிகள், குடிநீர் மூலம் போன்றவை).
6. உங்கள் தகவலை சமர்ப்பித்து SE ஐடியைப் பெறவும்
7. எண்ணிக்கையாளர் உங்கள் வீட்டுக்கு வரும்போது SE ஐடியை அவர்களிடம் கொடுக்கவும்

*போர்ட்டல் ஒரு வீட்டுக்கு ஒரு எண்ணைப் பயன்படுத்த பரிந்துரைக்கிறது, முன்னுரிமை ‘குடும்பத் தலைவர்’ எண்ணாக இருக்க வேண்டும்.

# நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய தேதிகள்:

## ஏப்ரல்

- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள்: ஏப்ரல் 1-15
- NDMC மற்றும் டெல்லி கண்டோன்மென்ட் போர்டு: ஏப்ரல் 1-15
- கோவா, கர்நாடகா, லட்சத்தீவு, மிசோரம், ஒடிசா, சிக்கிம்: ஏப்ரல் 1-15
- குஜராத், தாத்ரா மற்றும் நகர் ஹவேலி, டாமன் மற்றும் டையூ: ஏப்ரல் 5-19
- உத்தரகாண்ட்: ஏப்ரல் 10-24
- மத்திய பிரதேசம்: ஏப்ரல் 16-30
- ஆந்திரப் பிரதேசம்: ஏப்ரல் 16-30
- அருணாச்சல பிரதேசம்: ஏப்ரல் 16-30
- சண்டிகர்: ஏப்ரல் 16-30
- சத்தீஸ்கர்: ஏப்ரல் 16-30
- ஹரியானா: ஏப்ரல் 16-30
- பீகார்: ஏப்ரல் 17-மே 1

முடிவாகாதது: மேற்கு வங்கம்

## மே மாதம்

- தெலங்கானா: ஏப்ரல் 26 - மே 10
- பஞ்சாப்: ஏப்ரல் 30 - மே 14
- மகாராஷ்டிரா: மே 1 - 15
- மஹாராஷ்ட்ரா மே 1 - 15
- மேகாலயா: மே 1 - 15
- ராஜஸ்தான்: மே 1 - 15
- ஜார்க்கண்ட்: மே 1 - 15
- உத்தரப் பிரதேசம்: மே 7 - 21
- ஜம்மு காஷ்மீர், லடாக், புதுச்சேரி: மே 17 - மே 31

## ஜூன்

- ஹிமாச்சல பிரதேசம்: ஜூன் 1 - 15
- கேரளா : ஜூன் 16 - 30
- நாகாலாந்து: ஜூன் 16 - 30

## ஜூலை

- தமிழ்நாடு: ஜூலை 17 - ஜூலை 31
- திரிபுரா: ஜூலை 17 - ஜூலை 31

## ஆகஸ்ட்


- அஸ்ஸாம்: ஆகஸ்ட் 2 - ஆகஸ்ட் 16
- மணிப்பூர்: ஆகஸ்ட் 17 - ஆகஸ்ட் 31

# டிஜிட்டல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027: சிறப்பம்சங்கள்

- ‘லிவ்-இன்’ உறவில் உள்ள தம்பதிகள் தங்கள் உறவை ஒரு நிலையான ஒன்றியமாகி கருதினால், திருமணமானவர்களாக கருதப்படுவார்கள்.

- சுய கணக்கெடுப்பின்போது ஒரு வீட்டிற்கு ஒரு தொலைபேசி எண் பரிந்துரைக்கப்படுகிறது. இந்த நபர் அன்றாட விவகாரங்களை நிர்வகிக்கும் மற்றும் முடிவுகளை எடுக்கும் ஒருவராக இருக்கலாம், மேலும் எந்த பாலினத்தவராகவும் இருக்கலாம்.

- 1931 ஆம் ஆண்டுக்குப் பிறகு சாதி எண்ணிக்கையை கணக்கிடும் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு இது.



# டிஜிட்டல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027

- இத்தகைய டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்பு தரவு தனியுரிமை, கண்காணிப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு என்ன அர்த்தம்?

- குடும்ப 'தலைவரின்' பெயரில் கணக்கீடு செய்யப்பட்டால் பெண்களின் சுயாட்சிக்கு என்ன விளைவு?

- அரசாங்கத்திற்கு மேலும் அதிகாரம் அளிக்கும் லிவ்-இன் சட்டங்களால் சாதிகளுக்கிடையேயான, பால்புதுமையினர் (queer) மற்றும் மதங்களுக்கிடையேயான உறவுகள் எவ்வாறு பாதிக்கப்படும்?

இந்தியாவில் சாதிகளை எண்ணும் வரலாறுகள் மற்றும் 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஏன் சாதி நிறவெறியுடன் சாதி சக்தியையும் கணக்கிட வேண்டும் என்பது பற்றி அறிஞர் திரினா வித்தயாதிலுடன் நாங்கள் நடத்திய நேர்காணலைப் படியுங்கள். முழு நேர்காணலை **behanbox.com**-ல் படிக்கலாம்.

Behanbox Talkies Caste Census

## 'Census 2027 Should Enumerate Caste Power Alongside Caste Apartheid'

**Saumya Kalia**
New Delhi | August 18, 2025





## அடுத்த சில வாரங்களில் நாங்கள் இந்த கேள்விகள் பற்றி பேசுவதை பின்தொடரவும்.

behanbox.com
instagram.com/behanbox

**BehanBox-இன் பெண்ணியத் தேர்தல் செய்தி அறை இணையுங்கள்: tinyurl.com/FEN-signup**

BehanBox-இன் பெண்ணிய தேர்தல் செய்தி அறைக்காக, இதை பிருந்தா மற்றும் குணவதி மொழிபெயர்த்து திருத்திச் சரிபார்த்தனர்.